**குண்டசாலை பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குண்டசாலை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 16 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா

எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய தினசரி தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைகள் தொடர்பில் விஷேட நிதி ஒதுக்கீடு உட்படும்.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய சபையின் நிதிக் கூற்றக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படல் வேண்டுமென நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுககளை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிடில் சபைக்குரிய கட்டிடத்தின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 500,000 தொகை மூலதனமாக்கப்பட் டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவினூடாக அவற்றினை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி சபைக்குரிய ட்ராக்டர் வண்டியின் பெறுமதி கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இதனை மஹாவலிக்கு மீண்டும் கையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதோடு, அதன் காரணமாக அதன் பெறுமதி கணக்கீடு செய்யப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) முன்னைய ஆண்டு அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற ரூபா 6,221,374 தொகை பெறுமதியான கம்பக்டர் மற்றும் ட்ரக்டர் டேலர் | நாட்குறிப்பு பதிவினூடாக அவற்றினை சீர்செய்வதற்கும் மற்றும் ட்ராக்டர் டேலரின் | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | என்பனவற்றின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன் | வேண்டும். |
| (ஈ) | குண்டசாலை மற்றும் பாததும்பர பிரதேச சபைகள் இரண்டும் ஒப்பந்தமொன்றின் கீழ் நடாத்திச் செல்லும் அலுத்வத்த கொம்போஸ்ட் பிரிவு திட்டத்தின் வருமானம் மற்றும் செலவுகளை உட்படுத்தி தனியான கணக்கொன்று தயாரித்து, சபைக்குரிய இலாபத்தினை மட்டும் நிதியறிக்கைகளில் உட்படுத்த வேண்டியிருந்தும் மொத்த வருமானம் மற்றும் செலவுகளை கணக்கீடு செய்ததனால் சபையின் வருமானம் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | வருமான செலவுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு அவற்றினை சரிபார்ப்பது தொடர்பாக உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்திற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

**1.6.2. இணக்கமில்லாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுக்குரிய அட்டவணைகளில் உட்பட்ட 03 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் பயன்பாட்டிலுள்ள புத்தகங்களில் காணப்படும் மீதிகளுக்கிடையே ரூபா 2,803,012 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இணக்கமின்மைக்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு அவற்றை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,319,707,510 ஆக காணப்படுவதுடன், ஈடுபடுத்திய மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்பு கணக்கு மீதி மற்றும் ஈடுபடுத்திய மூலதனத்திற்கான உதவு தொகை பங்களிப்பு கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,319,187,889 ஆன இரண்டு கணக்கு மீதிகளுக் கிடையிலான வேறுபாடு ரூபா 519,621 தொகை காணப்பட்டது. | இணக்கமின்மைக்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு அவற்றை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் 02 கணக்கு மீதிகளுக்குரிய கூட்டுத்தொகை மீதி ரூபா 23,691,740 ஆன தொகை மற்றும் பயன்பாட்டு அட்டவணைகளிலுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 224,181 தொகை வேறுபாடொன்று காணப்பட்டது. | இணக்கமின்மைக்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு அவற்றை சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக காணப்படும் ரூபா 15,382 ஆன தொங்கல் கணக்கு மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிக்குரிய காரணத்தினை சரியாக இனங்காண முடியாதிருப்பதனால் பல வருடங்களாக தீர்ப்பதற்கு முடியாதிருப்பதாக காணப்படுவதுடன் மேலும் அவை பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக. | இந்த மீதியினை இனம் கண்டு சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 நிகழத்தக்க பொறுப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி அனுமதியற்ற நிர்மாணங்களை தடை செய்தல் மற்றும் வீதிகள் தொடர்பில் சபைக்கு எதிராக 2006 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை 26 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பிலான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பரீட்சிக்கப்பட்டதன் பின் பதிலளிக்கப்படுவதாக. | நிதிக்கூற்றுக்களை கையாளும் தரப்பினருக்கு அவசியமா தீர்மானங்களை எடுப்பதற்கு அவசியமான தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.5 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43,604,843 ஆன இருப்பு பதிவு பதிவேடு மற்றும் பொருட் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கணக்காய்வின் போது அவை திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | எதிர்காலத்தில் வைப்பு பதிவேட்டை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உரிய சான்றுகளை முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7. இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | 126 (vii) (ஊ) பிரிவு மற்றும் 2016 திசெம்பர் 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி படி | வருட ஆரம்பத்தில் விளம்பரப் பதாகை தொடர்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவ்வாரான ஆய்வொன்று செய்யப்படாதனால் விளம்பரப் பதாகைகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 600.000 தொகை வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது. | இந்த வருடத்தில் பயிலுனர் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | 149 ஆம் பிரிவு | குண்டசாலை சபை அதிகார எல்லையினுள் நடாத்திச் செல்லப்படும் இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 14 ஹோட்டல்களில் மீளாய்வாண்டிட்குரிய வருமானத்தில் 1 சதவீத கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை அது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 1982 இன் 4 மற்றும் 1984 இன் 44 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1988 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி சட்டத்தின் 28(ஆ) 01 ஆம் பிரிவு | அமுனுகம பஸ்தரிப்பிடத்தில் அனுமதியின்றி வீதிப் ஒதுக்கு காணியையும் உட்படுத்தி 05 கடை அறைகளைக் கொண்ட வர்த்தக வியாபார கட்டிடத் தொகுதியொன்று தனியார் ஒருவரினால் கட்டப்பட்டிருந்தது. இந்த அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பில் சபை உத்தியோகத்தர்களினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நபர்களுக்கு அவற்றை உடைத்து அக்றுமாறு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2013 ஜுலை 31 ஆம் திகதிய உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | 150 முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 1262 முச்சக்கர வண்டிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 601,200 தொகைக் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முச்சக்கர வண்டி ஆய்வு மற்றும் நிலுவைக் கட்டணங்களை அறவீடு செய்யும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக . | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 91,567,788 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,898,648 ஆக இருந்தது. இதற்கான பிரதான காரணம் மீளாய்வாண்டில் சாதாரண நிர்வாக வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்கையில 241 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டமையாகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீத வரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வரி மீதி ரூபா 12,664,709 தொகையில் வருடத்தினுள் ரூபா 2,844,808 தொகை அல்லது 22 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய பட்டியல் தொகையில் 49 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆம் திகதி போது அறவிடப்பட வேண்டியிருந்த வீதவரி வரி ரூபா 25,995,588 தொகையில் அரச நிறுவனங்களிலிருந்து பல வருடங்களாக அறவிடப்பட வேண்டிய ரூபா 381,716 தொகை நிலுவை வீதவரி வரி உள்ளடங்கி இருந்ததுட்ன அந்த நிலுவை மீதிகளை அறவிட எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை கழிவுப்பொருள் வரி ரூபா 639,550 மீதித் தொகையில் வருடத்தினுள் ரூபா 254,800 தொகை அல்லது 40 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. திசெம்பர் மாத இறுதியில் ரூபா 769,500 நிலுவை காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதிகளை அறவிட எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2020 திசெம்பர் 31 இல் 73 பிரிவுகளில் ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 55,295 தொகையில் 02 அரச நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,002 தொகையும் உள்ளடங்கியிருந்தது. | அறவிட முடியாத ஏக்கர் வரியை ஆவணங்களில் இருந்து நீக்குவதற்கும், நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கும் வருமானப் பரிசோதகரிடம் உரிய பட்டியல் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | ----------- | | |
| | மெனிக்ஹின்ன பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் 03 கடைகளில், மெனிக்ஹின்ன கிரிமட்டிய சந்தியில் மேல்மாடி வியாபார கட்டிடத்தில் 02 கடை அறைகள், திகன ரனவிரு வீதியில் 59 கடைகள், பலகொல்ல மொறகஹபிடிய பல்பணி கட்டிடத்தொகுதியில் 51 கடைகள், பொல்கொள்ள சர்வோதய கட்டிடத் தொகுதியில் ஒரு கடை மற்றும் மெனிக்ஹின்ன பொது வியாபார சந்தையில் 19 கடைகளிலும் ரூபா 780,994 தொகை மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டியிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ஏனைய வருமான நிலுவை ரூபா 2,400,518 தொகையில் வருடத்தினுள் ரூபா 196,350 தொகை அல்லது 08 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன். வருடத்தில் பட்டியலிடப்பட்ட ரூபா 263,000 தொகையில் ரூபா 112,038 அல்லது 43 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டதனால் வருட இறுதியில் ரூபா 2,359,131 தொகை மொத்த நிலுவையாக காணப்பட்டது. | கொவிட் 19 தொற்று நிலமை காரணமாக வருமானம் சேகரிப்பு குறைவடைந்ததாக. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தனியார் ஹோட்டல் ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட போலி கணக்கு மூலம் 2015, 2016, 2017 வருடங்களில் ரூபா 2,358,313 தொகை வரி செலுத்தப்பட்டிருந்தும், சுற்றுலாத்துறை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களுக்கு அமைய ரூபா 14,462,640 ஆனு வருமானமொன்று குறைவாக அறவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், அந்த வருமானத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை என்பதுடன், 2018, 2019 ஆண்டு தொடர்பிலும் அந்த நிறுவனத்தினால் வருமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை சட்ட ஆலோசனை பெற்றுக் கொண்டு வழக்குத் தாக்கள் செய்ய முன் இறுதி அறிவித்தல் வெளியிடுவதற்குரிய ஆவணங்களை தயாரிக்கும் வேலைகள் முடிக்கப்பட்டுள்ளதாகவு ம், 2019, 2020 ஆண்டுகள் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் . | உரிய வருடங்களின் நிதிக்கூற்றுக்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதனடிப்படையில் அறவிடப்பட வேண்டிய குறித்த வரித் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,591,024 தொகையில் 01 முதல் | நிலுவை கேள்விப்பத்திரக் கட்டணம் மற்றும் மதிப்பிழந்த காசோலை தொடர்பாக உள்ளராட்சி | தாமதமின்றி தீர்வு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 05 வருட காலத்திற்கு உட்பட்ட ரூபா 27,135,598 தொகையும் 05 வருடங்களை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 155,532 ஆகவும் காணப்பட்டது. நிலுவை மீதிகளை அறவிட எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மன்ற ஆலோசனைப்படி நடவடிக்கை எடுப்பதுடன் கைத்தொழில் கடன் பட்டோர் எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பேன் | |
| (ii) | மீளாய்வாண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 156,969,239 ஆகும். அது தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 01 முதல் 05 வருடங்கள் வரையான உரிய கணக்கு மீதிகள் ரூபா. 23,331,564 ஆக இருந்ததுடன் தீர்ப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் மீதிகளைப் பரீட்சித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும். | தாமதமின்றி தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 3.2 செயலாற்றல் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு சபைக்குரிய ரஜரூப சந்தை ரூபா 9,080,564 செலவில் செய்து நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் ரூபா 675,029 செலவவில் செய்து மலசல கூடமொன்றும் அமைக்கப்பட்டது. கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்தும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாது செயலற்றுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்விடத்திலிருந்து வருமானம் ஈட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாக. | சபைக்குரிய வளங்களினால் அதிகூடிய விளைவினைப் பெறக்கூடிய வகையில் செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பலகொல்ல மொறகஹபிடிய வியாபார கட்டிடத் தொகுதியில் கடையொன்றும் பலகொள்ள மொறகஹபிடிய பல்பணி கட்டிடத்தொகுதியில் 05 கடைகள் கேள்வி கோரி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தக் கடைகளுக்குரிய குத்தகைக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வியாபார நடவடிக்கைகளுக்காக திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக. | குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகளை விரைவாக பூர்த்தி செய்து வருமானம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த முகாமைத்துவ குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை கட்டிடத்தின் நான்காம் மாடி ரூபா 13,245,294 செலவில் நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2019 ஏப்ரல் 19 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வு தினமான 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 134 மீட்டர் பரப்பளவிலான மாநாட்டு மண்டப பாவனைக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதுடன், கட்டிடத்தை பூரணப்படுத்தும் போது அத்தியவசிமான பகுதியான இரும்பு கைப்பிடி மற்றும் உரிய சுகாதார வசதிகளுடன் பயன்படுத்தக் கூடியவாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக் கட்டிடத்தில் காணப்படும் குறைபாடுகள் 2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குரிய வளங்களினால் அதிகூடிய விளைவுகளை பெறக்கூடிய வகையில் செயற்திறனாக பயன்படுத்த திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) | அலுத்வத்த கவஷிமா இயந்திர கொம்போஸ்ட் பிரிவினை விஸ்தரிப்பதற்காக பத்திரிகை விளம்பரப் படுத்தலின் போது மதிப்பீட்டுப் பெறுமதியை அதிகரித்து காட்டப்பட்டதனால் ஏற்பட்ட நிதி நட்டமொன்றுடன் நிலத்தி கிரவல் இடப்பட்டிருக்கையில் கம்பி பயன்படுத்தும் தேவை தொழில்நுட்ப ரீதியாக உறுதிப்படுத்தப்படாமல் கம்பி பயன்படுத்தியமைக்காக செலவிடப்பட்ட ரூபா 1,827,936 தொகை மற்றும் நிலத்தில் மண் அகற்றுவதற்கும் மற்றும் அவற்றை நிரப்புவதற்குமாக மேலதிகமாக செலவிடப்பட்ட ரூபா 5,309,574 தொகையும், மண் கொண்டு செல்வது தொடர்பில் அனுமதிக்கப்பட்ட விகிதங்கள் குறிப்பிடப்பட்டிருந்தும் வேறு விலை விகிதங்கள் முன்வைக்கப்பட்டு செலவிடப்பட்ட ரூபா 1,121,849 தொகையும் அனுமதிக்கப்பட்ட விவரக்குறிப்பிற்கமைய விலைகள் பாவிக்கப்படாமல் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 721,992 தொகையையும் அறவீடு செய்ய | (i) இந்த விளம்பரத்தை திருத்த வேண்டியிருந்தும் மீண்டும் விளம்பரப்படுத்த போதிய காலம் இருக்கவில்லை<br><br>(ii) JCB போன்ற இயந்திரங்கள் போக்குவரத்துச் செய்யப்படுவதாகவும் நிலம் கொங்ரீட் இடும் போது கம்பி பயன்படுத்தப்படுவதாக. கொங்ரீட் மேற்பரப்பிற்கு அமுக்க வலிமையை தாங்கும் சக்தி இருந்தாலும் அலுத்த சக்தியை (TENSILE FORCE) தாங்க முடியாததுடன் கம்பியை பயன்படுத்தப்படுவதின் ஊடாக அவ்வேலையை பூர்த்தி செய்துள்ளதாக. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள நட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) கழிவுப்பொருள் அடுக்குகளுக்கு மத்தியில் நிர்மாணிப்பு செய்ய முடியாததுடன் அதனை சரியான தரத்தில் செய்யப்பட வேண்டியதுடன் அவ்வாறு அகற்றப்படும் கழிவுகள் தொடர்பில் சிறந்த மண் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக.